# கரூர் மாநகராட்சி
# மாமன்ற கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2021ம் ஆண்டு நவம்பர் 30ம் நாள் செவ்வாய் கிழமை மாலை 5.30 மணிக்கு கரூர் மாநகராட்சியின் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் திரு.ந.ரவிச்சந்திரன் அவர்கள் தலைமையில் மாமன்றக் கூட்டத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

## <u>மன்றப்பொருள்</u>

1)கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.36ல் வாங்கலம்மன் நகர் பகுதியில் மின்கம்பம் எண்.36/126–ல் புதியதாக தெருவிளக்கு அமைக்க மின்பாதை அமைத்து மின்இணைப்பு பெறுவதற்கு மின்சார வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ. 4860/–ஐ மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1) மன்றம் அனுமதிக்கலாம்,
2)மேற்படி பணி மேற்கொள்ள மின் வாரியத்திடம் இருந்து வரப்பெற்ற மதிப்பீட்டு பட்டியல் தொகை ரூ.4860/–ஐ மின்சார வாரியத்திற்கு பொது நிதியில் இருந்து செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம். (5200/2021/இ3)

**தீர்மான எண்.35 அனுமதிக்கப்பட்டது.**

2)கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு.48ல் பெருமாள்பட்டி பகுதியில் தெருவிளக்கு வசதி வேண்டி அந்த பகுதி மக்கள் விண்ணப்பித்ததற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு மேற்கண்ட குடியிருப்பும் அருகில் தெருவிளக்கு கடத்தி அமைந்துள்ள மின்கம்பம் சுமார் 500 மீட்டர் தூாரம் உள்ளது. எனவே புதிய மின்கம்பம் அமைத்து புதிய மின்இணைப்பு பெற்று தெருவிளக்கு வசதி ஏற்படுத்தி தருவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/– மாநகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ3/9672/2021)

**தீர்மான எண்.36 அனுமதிக்கப்பட்டது.**

3)கரூர் மாநகராட்சிக்குட்பட்ட நெரூர் மலைமை நீரேற்று நிலையத்தில் 110 Scheme உள்ள 40HP மின்மோட்டாருக்கான ஸ்டார்டர் பழுதடைந்துள்ளதை புதிய Air Brackfully Automatic star- Delter (Air Cooled) மாற்றி அமைக்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் உறை கிணற்றில் உள்ள உள்ள 20 HP மற்றும் 15HP மின்மோட்டார் பழுதடைந்துள்ளதை Revinding செய்து பொருத்திட வேண்டியது அவசியமாகிறது. எனவே குடிநீர் பணியின் அவசியம் கருதி உடன் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.00 லட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ3/10419/2021)

**தீர்மான எண்.37 அனுமதிக்கப்பட்டது.**

4) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட நெரூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 150 HP V.T.Pumpன் மோட்டார் பேரிங் பழுதடைந்து இயக்க இயலாமல் உள்ளது. எனவே புதிதாக பேரிங் மாற்றிடவும், மேலும் 185 Sqmm UG Cable 4 இடங்களில் பழுது ஏற்பட்டுள்ளதை அகற்றி விட்டு

புதிதாக மாற்றவும், 110 Scheme motor–க்கான 50 SQmm UG Cable புதிதாக மாற்றிடவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**
**1)**மன்றம் அனுமதிக்கலாம்,
**2)**மேற்படி பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.90 இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். . (10420/2021/இ3)

**தீர்மான எண்.38 அனுமதிக்கப்பட்டது.**

**5)**கரூர் மாநகராட்சி திண்டுக்கல் – கரூர் சாலையில் வெங்கக்கல்பட்டி பாலம் நான்கு புறமும் மாநகராட்சி சார்பாக அமைக்கப்பட்ட மின்விளக்கு கம்பங்களை மாற்றியமைக்கும் பணிக்கு முதன்முறையாக 16.11.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.4.70லட்சம்</u>**

1) S.Sankar Anand Infra, Karur மதிப்பீட்டை 0.18% சதம் குறைவு
2) RPS Construction, Karur மதிப்பீட்டை 1.78% சதம் அதிகம்

**அலுவலகக் குறிப்பு**
**1)**மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.442, நாள்.31.08.2021 ரூ.4.70இலட்சத்தில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
**2)**மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள S.Sankar Anand Infra, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (இ3/4584/2021)

**தீர்மான எண்.39 அனுமதிக்கப்பட்டது.**

**6)**கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ளஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை பராமரிக்கவும் மேற்படி பணியினை தனியார் துப்புரவு பணி முகமை மூலம் மேற்கொள்ளவும் பராமாப்பு செலவினத்தை மாநகராட்சியில் வசூல் ஆகும் சொத்துவரியில் ஒரு அங்கமான கல்வி வரியில் இருந்து மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.166 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள்.26.11.2016ல் பணியாளர்களை தினசரி விலை விகித அடிப்படையில் அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட துப்புரவு பணியாளர்கள் சம்மந்தப்பட்ட பள்ளிகளில் பள்ளி அறைகளை சுத்தம் செய்தல் பள்ளி குழந்தைகள் உணவு உண்ணும் அறையினை சுத்தம் செய்தல், கழிவறைகளை சுத்தம் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியிடங்களை தனியார் துப்புரவு முகமை மூலம் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணைபடி கரூர் மாநகராட்சி பகுதிகளில் கணக்கீடு மேற்கொண்டதில் 41 பள்ளிகள் கீழ்கண்டவாறு உள்ளது.

| | |
|---|---|
| தொடக்கப்பள்ளிகள் | 19 |
| நடுநிலைப்பள்ளிகள் | 12 |
| உயர்நிலைப்பள்ளிகள் | 5 |
| மேல்நிலைப்பள்ளிகள் | 5 |
| மொத்தம் | 41 |

மொத்தம் 41 பள்ளிகளுக்கு 46 நபர்களை அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியாளர்களுக்கான விலை விபரம் மற்றும் இதர EPF, ESI போன்றவற்றை கணக்கிடப்பட்டு நாள் ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ.எண் | விவரம் | தூய்மை பணியாளர் | எண்ணிக்கை | நாட்கள் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | அடிப்படைஊதியம் | 391 | 46 | 365 | 6564890 |
| 2 | சீருடைகள்பாதுகாப்புஉபகரணங்கள்மற்றும் சேவைகட்டணம் | 27.37 | 46 | 365 | 459542.30 |
| 3 | பணியாளர்களின்ஊதியம் மற்றும் வெளிபணிமுகமைக்கானசேவைவரிகட்டணம் (18%ஊதியம் மற்றும் 18%சேவைகட்டணம்) | 75.31 | 46 | 365 | 1264454.90 |
| 4 | பணியாளரின் பங்களிப்புEPS 8.33%, EPF 3.67%, ஒப்பந்ததாரரின் பங்களிப்பு 0.5% and EDLI 0.5% | 50.83 | 46 | 365 | 853435.70 |
| 5 | ESI 3.25% பணியாளரின் பங்களிப்பு | 12.71 | 46 | 365 | 213400.90 |
| 6 | மொத்தம் | **557.21** | 46 | 365 | **9355723.80** |
| 7 | EPS,EPF,EPFஒப்பந்ததாரர் , ELDI, (வ.எண்4+5) பணியாளர் ஊதியத்தில்பிடித்தம் | 63.54 | 46 | 365 | 1066836.60 |
| 8 | GST (வ.எண் 3) பிடித்தம் | 75.31 | 46 | 365 | 1264454.90 |
| 9 | பணியாளரின் ஊதியபிடித்தம் ( ESI-0.75%, EPF-12%,மொத்தம் = 12.75%, | 49.85 | 46 | 365 | 836981.50 |
| 10 | TDS பிடித்தம் 2%, (வ.எண்.6) | 11.14 | 46 | 365 | 187040.60 |
| 11 | ஒப்பந்ததாரருக்கானசேவைகட்டணம் | 27.37 | 46 | 365 | 459542.30 |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்

2)அரசாணையில் தெரிவித்துள்ள வழிகாட்டுதலின்படி ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

3)மேற்கண்ட பணிக்கு செலவுத் தொகை ரூ.**93,55,724**/—ஐ மாநகராட்சி சொத்துவரியிலிருந்து சேகரம் ஆகும் கல்விவரியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(எச்1/9197/2021)

**தீர்மான எண்.40** அனுமதிக்கப்பட்டது.

7)தமிழக அரசு மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் உத்திரவின் பேரில் கடந்த சில வாரங்களாக சென்னையில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட பாதிப்பினை சரிசெய்ய கரூர் மாநகராட்சியிலிருந்து 50 தூய்மை பணியாளர்கள், 3 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், 2 ஓட்டுநர்கள் மற்றும் 2 லாரிகள், தளவாட பொருட்களுடன் 2 துப்புரவு ஆய்வாளர்கள் அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதற்கிணங்க, இம்மாநகராட்சியிலிருந்து மேற்கண்ட எண்ணிக்கையில் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் லாரி வாகனங்கள் உடனடியாக 12.11.2021—ம் தேதியன்று மழையினால் பாதிக்கப்பட்ட சென்னை மாநகராசிக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார பணிகள் மேற்கொள்ள அனுப்பி வைக்கப்பட்டது. சென்னை சென்றுவர போக்குவரத்து செலவினம் மற்றும் 10 முதல் 15 நாட்கள்தங்கும் சூழ்நிலை உள்ளதால் 50 தூய்மை பணியாளர்களுக்கு சாப்பாடு மற்றும் இதர செலவினங்கள் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.75000/— (ரூபாய் எழுபத்தி ஐந்தாயிரம்) திரு.சு.சிக்கணன் துப்புரவு ஆய்வாளர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படிபணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.75000/— (ரூபாய்எழுபத்திஐந்தாயிரம்) பொதுநிதியில்கீழ்செலவினம் மேற்கொள்ளமன்றத்தின் அனுமதிக்கலாம். (எச்1/5784/2019)

**தீர்மான எண்.41** அனுமதிக்கப்பட்டது.

8) கரூர் மாவட்டம், கரூர் வட்டம் தோரணக்கல்பட்டி கிராமத்தில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் உள்ள மண்ணை பரிசோதனை மற்றும் வடிவமைப்பு (Design G+2) செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு Geotechnical Consultant, Erode அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன்படி, கரூர் மாவட்டம், கரூர் வட்டம் தோரணக்கல்பட்டி கிராமத்தில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் உள்ள மண்ணை பரிசோதனை மற்றும் வடிவமைப்பு (Design G+2) செய்வதற்கு V.R Geotechnical Engineers, Erode அவர்களின் பட்டியல் தொகை ரூ.68000/– வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆதலால் மேற்படி பணிக்கான தொகை ரூ.68,000/– ஐ V.R Geotechnical Engineers, Erode அவர்களுக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.68000/–ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/8670/2020)

**தீர்மான எண்.42 அனுமதிக்கப்பட்டது.**

**9)**கரூர் மாநகராட்சியின் பொறியியல் பிரிவிற்கு வெளிக்கொணர்வு மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தனியார் மூலம் வார்டு 1 முதல் 48 வரையுள்ள தெருவிளக்குகளை ஒரு ஆண்டுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 21787/2020/EA2, நாள்.02.10.2021 தெரிவித்துள்ளபடி. வெளிக்கொணர்வு முகமை மூலம் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்கு பணியாளர்களை பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல் நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. இந்த அளவுகோலின்படி மாநகராட்சி நிரந்தர மின் கம்பியயாளர் 4 எண்ணிக்கையும், மின் கம்பி உதவியாளர் 4 எண்ணிக்கை நீங்கலாக கீழ்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகின்றது.

| வ.எண் | பணியிடங்கள் விபரம் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Wireman | 13 |
| 2 | Electrical helper | 13 |

மேற்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட பராமரிப்பு பணியாளர்களுக்குண்டான உத்தேச செலவினம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.70.10 இலட்சமாகும். மேற்கண்ட மதிப்பீட்டு தொகைக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கு முன்மொழிவு பிரேரணை அனுப்புவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தொகை ரூ.70.10 இலட்சத்தினை வருவாய் நிதியில் செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. தெருவிளக்குகள் இயக்குதல் மற்றும் பராமப்பு பணிகளை மேற்கொள்வதற்கு செலவினத் தொகைக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ3/5320/2021)

**தீர்மான எண்.43 அனுமதிக்கப்பட்டது.**

**10)**கரூர் மாநகராட்சியின் பொறியியல் பிரிவிற்கு வெளிக்கொணர்வு மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தனியார் மூலம் குடிநீர் வழங்குதல் மற்றும் இயக்கி பராமரித்தல் ஒரு ஆண்டுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21787/2020/EA2, நாள்.02.10.2021 தெரிவித்துள்ளபடி வெளிக்கொணர்வு முகமை மூலம் குடிநீர் வழங்குதல் மற்றும் இயக்கி பராமரித்தல் பணிகளுக்கு பணியாளர்களை பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல் நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. இந்த அளவுகோலின்படி கீழ்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகின்றது.

| வ.எண் | பணியிடங்கள் விபரம் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Electrician C Certificate | 9 |
| 2 | Electrician B Certificate | 17 |
| 3 | Maintenance Worker | 93 |
| 4 | Driver | 1 |
| 5 | Cleaner | 1 |

மேற்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட பணியாளர்கள் உத்தேச செலவினம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.313.50 இலட்சமாகும். நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கு முன்மொழிவு பிரேரணை அனுப்புவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தொகை ரூ.313.50 இலட்சத்தினை குடிநீர் நிதியில் செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் வழங்குதல் மற்றும் இயக்கி பராமரித்தல் பணிகளை மேற்கொள்வதற்கு செலவினத் தொகைக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ2/9595/2021)

**தீர்மான எண்.44 அனுமதிக்கப்பட்டது.**

**11)**கரூர் மாநகராட்சியின் பொறியியல் பிரிவிற்கு வெளிக்கொணர்வு மூலம் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தனியார் மூலம் புதை வடிகால் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒரு ஆண்டுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 21787/2020/EA2, நாள்.02.10.2021 தெரிவித்துள்ளபடி வெளிக்கொணர்வு முகமை மூலம் புதை வடிகால் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பராமரிப்பு பணிகளுக்கு பணியாளர்களை பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல் நிர்ணயம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. இந்த அளவுகோலின்படி கீழ்கண்டவாறு பணியாளர்கள் தேவைப்படுகின்றது.

| வ.எண் | பணியிடங்கள் விபரம் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Plant Engineer | 1 |
| 2 | Electrical Superintendent | 1 |
| 3 | Electrician C Certificate | 1 |
| 4 | Electrician B Certificate | 2 |
| 5 | Maintenance Worker | 11 |
| 6 | Lab Assistant Grade II | 1 |
| 7 | Chemist | 1 |
| 8 | Sewer Inspector | 2 |
| 9 | Sewer Cleaner | 10 |
| 10 | Street Sewer | 3 |
| 11 | Driver | 4 |
| 12 | Cleaner | 4 |

மேற்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட பணியாளர்கள் உத்தேச செலவினம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.107.25 இலட்சமாகும். நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெறுவதற்கு முன்மொழிவு பிரேரணை அனுப்புவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளுக்கான செலவினத்தொகை ரூ.107.25 இலட்சத்தினை குடிநீர் நிதியில் செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. புதை வடிகால் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு செலவினத் தொகைக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ5/12700/2015)

**தீர்மான எண்.45 அனுமதிக்கப்பட்டது.**

**12)** கரூர் நகராட்சி வார்டு எண்.37 தெற்கு காந்திகிராமம் பகுதியில் இயங்கி வரும் நுண் உர மையம் (MCC) Conveyor belt பழுதடைந்துள்ளதை புதிதாக மாற்றுதல் மற்றும் Shredding machine soft பழுது பார்த்தல் பணிக்கு ரூ.75000/– மதிப்பீட்டில் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால்

பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம்–15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | அளவு |
|---|---|---|
| 1 | Supply and fixing of 6.0m x0.60m green colour PVC New conveying belt for old damaged conveying belt and welding grinding work for front and backside shaft and drum in Gandhigramam Micro Compost Centre Karur Municipality | 1No |
| 2 | Repair and service work for Bio shreadding machine in Micro compost Centre in Gandhigramam at Karur Municipality for following works<br>1)Replaceing of shreadding machine side cutting En 8 Blade -6Nos<br>2)Replacing of shreading machine side cutting En 8 Blade -1No<br>3)Outlet Knife welding &griding work-6Nos<br>4)Outlet mouth welding work-1No<br>5)Shreadder machine B-64 fan belt-2No | 1No |

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுதொகை |
|---|---|---|
| 1) | Sri.Kaliyamman Trading Corporation, Namakkal | 73366/– |
| 2) | Sri Athanur Amman Traders, Namakkal | 75700/– |
| 3) | Sri Akshaya Traders, Trichy | 78540/– |

அலுவலகக் குறிப்பு

மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Sri.Kaliyamman Trading Corporation, Namakkalஅவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.73366/–ஐ நகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(இ1/7613/2021)

**தீர்மான எண்.46** **பதிவு செய்யப்பட்டது.**

13) கரூர் நகராட்சி Repair and service work for Bio shreadding Machine and conveyor belt machine in Arugampalayam MCC centre பணிக்கு ரூ.22340/– மதிப்பீட்டில் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம்–15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | அளவு |
|---|---|---|
| 1 | Repair and service work for Bio shreadding Machine and conveyor belt machine in Arugampalayam MCC centre | 1No |

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுதொகை |
|---|---|---|
| 1) | Sri.Kaliyamman Trading Corporation, Namakkal | 22340/– |
| 2) | Sri Akshaya Traders, Trichy | 23000/– |
| 3) | Sri Athanur Amman Traders, Namakkal | 23400/– |

அலுவலகக் குறிப்பு
மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Sri.Kaliyamman Trading Corporation, Namakkal அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.22340/—ஐ நகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(இ1/8483/2021)

**தீர்மான எண்.47 பதிவு செய்யப்பட்டது.**

14)கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் கடந்த 07.05.2021 முதல் 14.08.2021 வரை 100 நாட்களில் மேற்கொள்ளப்பட்ட / மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளின் விபரங்களை தினமணி நாளிதழின் தொழில்மலர் 2021ன் புத்தகத்தில் பொதுமக்கள் அறியும் வண்ணமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.10,500 /— The Express Publications (Madurai) Private Limited, Trichyஅவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு:
1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத் தொகை ரூ.10500/— வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/7172/2021)

**தீர்மான எண்.48 அனுமதிக்கப்பட்டது.**

15)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கடந்த 07.05.2021 முதல் 14.08.2021 வரை 100 நாட்களில் மேற்கொள்ளப்பட்ட / மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளின் விபரங்களை தினத்தந்தி நாளிதழின் தொழில் மலர் 2021ன் புத்தகத்தில் பொதுமக்கள் அறியும் வண்ணமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.18,900/— The Daily Thanthi, Trichy அவர்களுக்குவழங்கமன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்காணும் செலவினத்தொகை ரூ.18900/— வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/7172/2021)

**தீர்மான எண்.49 அனுமதிக்கப்பட்டது.**

16)கரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கடந்த 07.05.2021 முதல் 14.08.2021 வரை 100 நாட்களில் மேற்கொள்ளப்பட்ட /மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப் பணிகளின் விபரங்களை தினபூமி நாளிதழின் தொழில்மலர் 2021ன் புத்தகத்தில் பொதுமக்கள்அறியும் வண்ணமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.10,500 /— ThinaBoomi, Trichy அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்காணும் செலவினத் தொகை ரூ.10500/— வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (இ1/7172/2021)

**தீர்மான எண்.50 அனுமதிக்கப்பட்டது.**

17)கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் கடந்த 07.05.2021 முதல் 14.08.2021 வரை 100 நாட்களில் மேற்கொள்ளப்பட்ட / மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகளின் விபரங்களை தினமலர் நாளிதழில் பொதுமக்கள் அறியும் வண்ணமாக விளம்பரம் செய்ததற்கு விளம்பரக் கட்டணம் ரூ.26796/—Raji Communication, Karur அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு:
1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத் தொகை ரூ.26796/— வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/7172/2021)

தீர்மான எண்.51 அனுமதிக்கப்பட்டது.

18) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட இராயனூர் இலங்கை அகதிகள் தமிழர் மறுவாழ்வு முகாம், கரூர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் கரூர் மாநகராட்சி பல்நோக்கு கூட்ட அரங்கத்தில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் அவர்களால் நலத்திட்ட உதவிகள் பெண் குழந்தைகளுக்கான நிமிர்ந்து நில், துணிந்து சொல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 24.11.2021 அன்று நடைபெற உள்ளது. அது சமயம் சாமியானா பந்தல், நாற்காலிகள், ஒலிபெருக்கி வசதிகள் செய்யும் பணிக்குரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டில் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் பணியின் அத்தியாவசிய அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1) | ACG Ventures, Vengakalpatti, Karur | 0.13% குறைவு |
| 2) | Sri Andal Electrovoice, Karur | 0.92% அதிகம் |
| 3) | S.A.Groups,42/1 Palaniyappa street, Karur | 1.35% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி பணிக்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள**ACG Ventures, Vengakalpatti, Karur**அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.1,60,000/—ஐ மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (இ1/10182/2021)

தீர்மான எண்.52 பதிவு செய்யப்பட்டது

19)கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.38ல் அம்மன் நகர் பகுதியிலிருந்து அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு செல்லும் சாலையில் இடைப்பட்ட 220மீ நீளம் சாலைப் பகுதி மண் சாலையாக உள்ளதால், அரசு மருத்துவமனைக்கு செல்லும் ஆம்புலன்ஸ் வாகனங்கள் மற்றும் பொதுமக்களுக்கு பெரும் இடையூறாக உள்ளதாலும், மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதால் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால், மருத்துவமனைக்கு செல்லும் நோயாளிகள் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி மேற்குறிப்பிட்டுள்ள மண் சாலைகளில் தார் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.20.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.20.80 இலட்சத்திற்கு மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/10945/2021)

தீர்மான எண்.53 அனுமதிக்கப்பட்டது.

20)கரூர் மாநகராட்சியில் அலுவலகப் பணிகள் மேற்கொள்ளவும், நகர்புற தேர்தல்கள் நடைபெற உள்ளதால் அப்பணிக்குத் தேவையான கணிணிகள், பிரிண்டர்கள், Xerox Machine மற்றும் Scanner Machine வாங்குவதற்கு Gem rate விலை விகிதத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.13.00லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

| Sl.No. | Particulars | Quantity |
|---|---|---|
| 1 | Specto intel care i5 10500 8GB 1000GB HDP / Windows 10 Home | 5 |
| 2 | Pixaar Next intel Core i5 10400 4GB / 1000GB HDP Windows 10 | 5 |
| 3 | HR 2625 with Duplex and DADF Xerox machine – laser Multi function Machine | 3 |
| 4 | Mono Computer Printer for A4 Paper Size Catridge Technology Laser Printer | 11 |
| 5 | Next Generation 2019R Epson Scanner | 2 |

அலுவலகக் குறிப்பு
1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்கண்ட பணி மேற்கொள்ள Gem rate விலை விகிதத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.13.00லட்சத்திற்கு இம் மாநகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். (இ3/10301/2021)

**தீர்மான எண்.54 அனுமதிக்கப்பட்டது.**

21) கரூர் மாநகராட்சிக்குட்பட்டவார்டு எண்.37 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் பழுதடைந்துள்ள வடிகால் சுவர்கள் மற்றும் பழுதடைந்துள்ள சிறுபாலங்களை உடன் பழுதுபார்க்கும் பணிக்கு முதன் முறையாக 16.11.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.4.80லட்சம்**

1. Thiru.M.Loganthan, Karur மதிப்பீட்டைவிட 0.03% சதம் குறைவு
2. RPS Construction, Karur மதிப்பீட்டைவிட 0.41% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:
1. மேற்படி பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண்.416, நாள்.13.08.2021ம் தேதி ரூ.4.80 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.M.Loganthan,Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம். (இ1/7693/2021)

**தீர்மான எண்.55 அனுமதிக்கப்பட்டது.**

22) கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 மற்றும் 14 வாங்கப்பாளையம் விவேகானந்தா தெரு மற்றும் பழைய போஸ்ட் ஆபிஸ் பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு முதன் முறையாக 16.11.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.13.00லட்சம்**

1. RPS Construction, Karur மதிப்பீட்டைவிட 0.24% சதம் குறைவு
2. Thiru.M.Loganathan, Karur மதிப்பீட்டைவிட 2.44% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:
1. மேற்படி பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண்.488, நாள்.30.09.2021ம் தேதி ரூ.13.00 இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள RPS Construction, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம். (இ1/9097/2021)

**தீர்மான எண்.56 அனுமதிக்கப்பட்டது.**

23) கரூர் மாநகராட்சி பகுதிகளில் தினசரி 74 மெட்ரிக்டன் அளவில் திடக்கழிகள் சேகரமாகின்றன, திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் 2016ன் படி தினசரி சேகரமாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகள் என தரம் பிரித்து மக்கும் கழிவுகளை சிமெண்ட் ஆலை (அ) மறு சுழற்சி மையத்திற்கு அனுப்பி அப்புறப்படுத்த வேண்டி உள்ளது. மேற்படி சேகரமாகும் கழிவுகளை தரம்பிரிக்க தூய்மை பணியாளர்களுக்கு சிரமமாக உள்ளதால் பொது மக்களிடையே

விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ‘‘எனது கரூர் – எனது பொறுப்பு’’ மற்றும் ‘‘குப்பைகளை தரம் பிரித்தல்’’ என இரண்டு வகையான வண்ண துண்டு பிரசுரங்கள் அச்சிடவும், மேலும் தற்போது பருவ மழை காலம் என்பதால் டெங்கு காய்ச்சல் பரவ வாய்ப்பு அதிகம் உள்ளது. எனவே பொதுமக்களிடையே டெங்கு காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் டெங்கு காய்ச்சல் தொடர்பாக வண்ண துண்டு பிரசுரம் என மூன்று வகையான வண்ண பிரசுரங்கள் தலா 75000 எண்ணிக்கையில் அச்சிட்டு வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1)அனுமதிக்கலாம்

2) மேற்படி பணிக்கான செலவினத்தை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (எச்1/11140/2021)

**தீர்மான எண்.57 அனுமதிக்கப்பட்டது.**

24)கரூர் மாநகராட்சி வார்டு எண்.18 பழனியப்பா தெருவில் தார் சாலை அமைக்கும் பணிக்கு முதன் முறையாக 16.11.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.7.00லட்சம்</u>

1. S.Sankar Anand Infra, Karur மதிப்பீட்டை விட 0.14% சதம் குறைவு
2. RPS Construction,Karur மதிப்பீட்டை விட 1.71% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.457, நாள்.15.09.2021ல் ரூ.7.00இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி வழங்கப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள S.Sankar Anand Infra, Karur ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம். (இ1/8275/2021)

**தீர்மான எண்.58 அனுமதிக்கப்பட்டது.**

25)கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தாந்தோணி கிராமம், சர்வே எண். 523/B3B, B4,B5A,B6A,B7A,B5B,B6B,B7B மற்றும் 526/ B1S1D,B1T1D,B1AB1,B1W5, B1W6, B1W6, B1AB2, B102, B1P1, B1R2A,B1Q1,B1S1B,B1T1C,B1W4,B1AB3,B1AA2 -ல் 0.51.84 ஹெக்டேர் (1.282 ஏக்கர்) பரப்பளவுள்ள இடத்தினை குடியிருப்பு மனைகளாக பிரிக்க மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1236/2021/க.மா, நாள்.11.10.2021ல் மனைபிரிவு வரைபடத்திற்கு ம.வ/மா.ந.ஊ.அ(க.மா) எண்.160/2021 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சிக்கு தானபத்திரம் எண்.4897/2021, நாள்.16.07.2021–ல் ஒப்படைக்கப்பட்டு அதன் அசல் ஆவணம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களால் மேற்கண்ட கடிதத்துடன் இணைத்து அனுப்பப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகர்மன்ற பொறியாளர் அவர்களின் குறிப்பில் உத்தேச மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு இடத்தில் வடிகால், தார்சாலைகள், குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றும் 4தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைக்க ரூ.99,444/– தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. என 16.11.2021–ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே, மேற்படி மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:–</u>

மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சியிடம் தானபத்திரம் எண்.4897/2021, நாள்.16.07.2021–ல் ஒப்படைக்கப்பட்டுள்ளதாலும், வடிகால், தார்சாலைகள், குடிநீர் பகிர்மான குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது என்றும் 4தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைக்க ரூ.99,444/– தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. எனவே மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கரூர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட

18 குடியிருப்பு மனைகள் கொண்ட மனைப்பிரிவு வரைபடம் ம.வ/மா.ந.ஊ.அ(க.மா) எண்.160/2021 –க்கு மனைப்பிரிவு இறுதி அனுமதி வழங்கலாம். (எப்1/9891/2021)

**தீர்மான எண்.59 அனுமதிக்கப்பட்டது.**

26)கரூர் நகராட்சி அலுவலகம் வரவேற்பறையில் பொதுமக்களுக்கு எளிதில் அறியும் வகையில் நகராட்சியினைசேவைகளைஅறிவுறுத்தல் வகையில் கீழ்கண்ட 3 அறிவிப்பு பலகைகள்

| வ.எண் | அறிவிப்புவிபரம் | அளவு | எண்ணிக்கை |
